## திரப்பனே பிரதேச சபை
## அநுராதபுர மாவட்டம்

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 07 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 21 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆகஸ்ட் 31 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரப்பனே பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மாகாண இறைவரி திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்குரிய நீதிமன்றத் தண்டப்பண வருமானம், ரூபா 983,747 ஆக இருந்த போதிலும் ரூபா 750,048 பெறுமதியாக கணக்கீடு செய்யப்பட்டமையால் ரூபா 233,699 குறைத்து காட்டப்பட்டிருந்தது.

(அ) காணி பதிவாளர் அலுவலகத்தின் பிரகாரம் 2014 ஆண்டு தொடர்பாக சபைக்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 679,990 ஆன முத்திரைக் கட்டண வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) சபைக்குரிய லபுநோருவ பொது நூலகத்தின் ரூபா 428,146 தொகையான 1948 நூலகப் புத்தகங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 364,750 தொகையான அலுவலக உபகரணங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) சபையின் பிளிசரு செயற்திட்டத்திற்காக நிர்மாணிக்கப்பட்டிருந்த ரூபா 5,572,026 தொகையான கட்டிடங்கள், நீர் வழங்கல் மற்றும் பாதுகாப்பு வேலி போன்ற சொத்துக்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமை தொடர்பான கூற்றின் பிரகாரம் மொத்தச் சொத்துக்களின் பெறுமதி ரூபா 70,686,864 ஆக இருந்ததுடன்மொத்த உரிமை மற்றும் பொறுப்புக்கள் பெறுமதி ரூபா 47,116,538 ஆக இருந்தமையால் நிதி நிலைமை தொடர்பான கூற்றில் ரூபா 23,570,326 ஆன இணக்கமின்மை காணப்பட்டது.

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் செயற்பாட்டு மிகை ரூபா 394,697 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செயற்பாட்டு பற்றாக்குறை ரூபா 336,098 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 கடை வாடகை

சபைக்குச் சொந்தமான கடைகளை குத்தகைக்கு எடுத்திருந்த 21 குத்தகையாளரிடமிருந்து மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடப்பட வேண்டியிருந்த குத்தகை தொகை ரூபா 411,068 ஆக இருந்ததுடன், அதில் ரூபா 254,350 தொகை 2012 ஆம் ஆண்டிற்கு முன்னர் அறவிடப்பட வேண்டிய தொகையாக இருந்ததுடன், இந்நிலுவையை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 நீதிமன்றத் தண்டப் பணம்

2013 முதல் 2015 ஆம் ஆண்டிற்காக அறவிடுவதற்காக இருந்த ரூபா 456,466 தொகை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படாதிருந்ததுடன் அந்நிலுவைத் தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.3 முத்திரைக் கட்டண வருமானம்

முத்திரைக் கட்டண பதிவேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடப்பட வேண்டிய ரூபா 1,058,890 ஆன முத்திரைக் கட்டண வருமானத்தை அறவீடு செய்வதற்கு சபை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.4 ஏனைய வருமானம்

(அ) மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 208 வரி அலகுகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 357,220 ஆன கழிவுப் பொருள் வரியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை சுற்றுலா அபிவிருத்தி சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள ஹொட்டெல்களில் விற்பனையின் மீது அறவிடப்பட்ட 1 சதவீத வரித் தொகையாக ரூபா 300,000 வரித் தொகை உலகல்ல ரிசோட் இடமிருந்து மீளாய்வாண்டிற்குரியதாக அறவிடப்பட்டிருந்த போதிலும் அந்த ஹொட்டெலின் கணக்காய்வு செய்யப்பட்ட வருமான அறிக்கை பெற்றுக் கொள்ளப்படாதிருந்தமையால் அப்பணம் விற்பனை புரள்வின் 1 சதவீதமா என்பதை உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

## 03. செயற்பாட்டு வினைத்திறனின்மை

### 3.1 முகாமைத்துவ செயற்றினனின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2011 ஆம் ஆண்டின் போது சபைக்கு கிடைக்கப்பெற்ற டிராக்டர் வண்டியொன்று 2016 யூன் மாதம் வரையிலும் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்படாமல் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், சபைக்குச்

சொந்தமான 05 வாகனங்களுக்காக வருடாந்த வரிப் பத்திரங்கள் மற்றும் காப்புறுதி சான்றிதழையும் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள 52 மயான பூமிக்குரிய அளவினை இனங்கண்டு உரித்தை முறையாக கையேற்பதற்கும் நிதிக்கூற்றுக்களுடன் உரிய தகவல்களை வெளிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்கும் உரித்தாக அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 375,660 ஆன முத்திரை வரி யை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் சபையில் 02 ஆண்டுகளிற்கு மேற்பட்ட ரூபா 333,572 கூட்டுத்தொகையான 16 வைப்பு மீதிகள் தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**விளைவற்ற சொத்துக்கள்**

ரூபா 568,500 பெறுமதியான அரிசி மாவுடன் அண்மித்த உற்பத்தி உபகரணத் தொகுதி நோக்கத்திற்குட்பட்ட செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் அந்த உபகரணங்கள் வருடக் கணக்காக விளைவற்று காணப்பட்டதுடன் பெறுமதி இனங்காண முடியாத 03 மோட்டார் சைக்கில்களும் டிராக்டரொன்றும் வருடக் கணக்காக விளைவற்றுக் காணப்பட்டதுடன் அது தொடர்பாக முறைப்படி நடவடிக்கை எடுப்பதற்கு பொறுப்பு வாய்ந்த தரப்பினர் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) புளியன்குளம் விளையாட்டரங்கை அமைத்தல் மற்றும் பார்வையாளர் மண்டபத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 459,802 செலவிடப்பட்டிருந்ததுடன் விளையாட்டரங்கில் புற்கள் வளர்ந்து இருந்ததன் காரணமாக விளையாட்டரங்கு பயன்பாட்டிற்கு எடுக்கப்படாதிருந்தமை 2016 யூன் 07 ஆந் திகதி பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டதுடன் நிர்மாணிக்கப்பட்டிருந்த விளையாட்டரங்கின் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாதிருந்தமையால் பார்வையாளர் அரங்கையும் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத மட்டத்தில் காணப்பட்டன.

(ஆ) கல்குளம் 20 வீடுகள் வீதியின் 1.5 கி.மீ இற்கு கொங்கிரீட் இடும் செயற்திட்டத்திற்குரிய வீதி மோட்டர் கிரேடர் செய்யப்பட்டு குருணிக்கற்கள் இட்டு பதப்படுத்தல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் மதிப்பீட்டுத் தொகையில் ரூபா 674,762 தொகையான கொங்கிரீட் இடல் செயற்திட்டத்தின் எஞ்சிய வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட பணத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) 2015 அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (மாகாண குறித்துரைக்கப்பட்ட அபிவிருத்தி மானியம்) உள்ளூராட்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 2,753,469 பெறுமதியான 14 செயற்திட்டங்கள் திட்டமிடப்பட்டிருந்துடன், ரூபா 1,086,639 தொகையான செயற்திட்டங்கள் அமுல்ப்படுத்தப் பட்டிருக்கவில்லை. ரூபா 1,233,421 பெறுமதியான ஏனைய 6 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

## 3.4 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

2011 ஆம் ஆண்டின் போது மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் நிதி ஏற்பாடுகளின் கீழ் ரூபா 5,572,026 தொகை செலவிடப்பட்டு சபை அதிகாரப் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையம் முறையாக செயற்படுத்த முடியாமை காரணமாக சுற்றாடலுக்கு பாதகமான நிலைமையொன்றையும் கிராமவாசிகளின் நாளாந்த வாழ்க்கை தொடர்பாக சிக்கலான நிலைமை உருவாகியிருந்ததாக மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் உத்தியோகத்தர்களால் 2016 ஏப்ரல் 27 ஆந் திகதி மேற்கொண்ட வெளிக்கள பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டிருந்தது.

## 04. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்